# இந்து சாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

# HINDU ORGAN

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

பிரதி விலை: சதம் 20.

ஆரம்பம் விரோதி ஹூ (1889) ஆவணிமீ 28-ம் உ   அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்   டெலிபோன்: 356

புத்-கூ0 ]   யாழ்ப்பாணம்:   காலயுத்தி ஹூ   புரட்டாதி மீ   கஉ டை   வெள்ளிக்கிழமை   (29 9-1978)   [ இல-உஉ


# சைவப் பெரியார் இட்ட சமயவித்து!

சைவப்பெரியார் நூற்றுண்டுப் பெருவிழாவிற்குத் தலைமைதாங்கிய 'இலக்கியக் கலாநிதி'யின் உரை சைவப் பெரியார் கேட்பரேல் 'என்னே மட்டுவிற் பதியின் புலோலிப் பொலிவு' என்பர் என்பதற் கையமின்று. (ஆ-ர்,

சைவப் பெரியார் அவர்கள் சைவ வித்தியா விருத்திச் சங்கத்துக்குத் தலைவராயிருந்தபோது, ஒருமுறை திருநெல்வேலிச சைவாசிரிய கலாசாலையில் நிர்வாக சபைக் கூட்டம் ஒன்று நடந்தது. அக் கூட்டத்துக்கு வந்த பெரியார் அவர்கள் கூட்டம் முடிந்த பின

இலக்கியக் கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

புறப்பட்டுச் செல்லும்போது, இடையில் உப அதிபர் திரு பொ. கைலாசபதி அவர்கள் தங்கும விடுதிக்கு அவர்களைச் சந்திக்கும் நோக்கமாக வந்தார்கள். விடுதியில் நான் மாத்திரம் இருந்தேன். பெரியாரின் வருகையைக் கண்ட நான், பெரியாரை ஆசனத்தில் அமரச் செய்து அருகே ஒதுங்கி நின்றேன்.

உப அதிபர் அவர்கள் வீட்டுக்குப் போயிருக்கலாம் என்றெண்ணுகின்றேன். அதனை அறிந்ததும் பெரியார் அவர்கள் மீண்டு சென்றிருக்கலாம. செல்லாமல், தெய்வ சங்கற்பம்போலும் இரண்டொரு நிமிஷம் தங்கி என்னுடன் உரையாடினார்கள். உரையாடல் ஒரு வினவுடன் தொடங்கியது. அவ் வினு 'சமயம் படிக்கிறதோ?' என்பது.

என் நிலைமை என்னென்பது, 'மிகவும் நாணித் தலை குனிந்து 'இல்லை' என்று அனுங்கினேன்,

அப்பொழுது ஆச்சரியக் குறி தோன்ற அவர்கள் பார்த்த பார்வை இன்னும் என் மனத் திரையில் காட்சியளிக்கின்றது. தமிழ் படிப்பது வேறெதற்கு? சமயம படிப்பதற்குத்தானே' என்ற கருத்து அவர்களின ஆச்சரியப்பார்வையிற படிக்கத்தக்கதாயிருந்தது.

உடன்பாடு தெரிவிக்கும் நிலையில் மிக மிக வெட்கின்றேன்,

'முதலில் திருவருட்பயன் படிக்கத் தொடங்கலாம் என்று சொன்னார்கள்; சொன்னார்கள் என்று சொலவது தப்பு; உபதேசித்தார்கள் என்றே சொல்ல வேண்டும், அவர்கள் அன்று இட்ட சமய வித்து, சமய சாதகர்களான உப அதிபா அவர்களின தண்ணிழலில் முளைகொண்டு வளர்வதாயிற்று.

பள்ளு முதலிய சிற்றிலக்கியப் பிரசங்கங்கள், கம்பராமாயணக் காட்சிகள மறைந்தன. கந்தபுராணம என் மனசிற் குடி புகுந்தது.

ஒரு உதாரணஞ் சொல்லுகின்றேன்.

வாலி ஸ்ரீ ராமன் மீது பக்தியுள்ளவன். இராமனின் தர்மங்களைக் கேள்விப்பட்டவன். இராமன் வனத்துள் கால் வைத்த அன்றே தாடகை தலைப் பட்டாள். விசுவாமித்திரர் 'விடு பாணம்' என்றார். இராமனுக்குக் கை கூசியது. இப்படிப்பட்ட இராமன தன் மேற் பாணந்தொடுப்பான் என்று, கனவிலும வாலி நினைத்ததில்லை! வாலி சுக்கிரீவனோடு மல்யுத்தம் புரியுஞ் சமயத்தில, மறைவிலிருந்து புறப்பட்டு, இராம பாணம வாலியின் மார்பை ஊடுருவியது

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

கல்விப் பெருஞ்செல்வப்பேறே!



சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தையுந்தந்தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதையாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே

## தாயகத் தமிழகம் மதுவொழிக்கத் தயார்!

### சேயகத்திலே தீமை இது சேனுயர்கின்றதே!

பாரத மத்திய அரசு தமிழ்நாட்டில் மது விலக்கு நடைமுறைக்கு வருவதை ஆமோதிப்பதாகச் செய்திகள் வெளிவருகின்றன.

பிரமாண்டமான தேசப் பரப்பில மதுவரக்கனை மாய்க்க வழியுண்டானுற் சின்னஞ்சிறு தீவிலே — ஈழத்திலே அந்த அரக்கன் தாண்டவமாடுகின்றான் என்பது ஆச்சரியமே!

மகுடாசுரனை, நரகாசுரனை வேறும் அசுரர்களையெல்லாம்சங்காரஞ்செய்த நிமித்தங்களை விரத விழாவாகக் கொண்டாடும் சைவர்கள் ஏராளமாக வாழும் யாழ் நாட்டில் 'மது' அசுரனை அழிக்க விதி வரவில்லைப்போலும்!

சென்னை - தமிழ்நாட்டில் மதுவருந்துவோருக்குத் தண்டனை விருந்தாய்விட்டது.

பொது மனிதருக்கு ஆறு மாதக் கடுங் காவல். அதிகாரத்திலுள்ளவர்கள் (அமைச்சர்கள் உட்பட) ஒருவருடக் கடுங் காவலுக்காளாவாராம்!

## திருநெல்வேலி சைவ அநாதர் இல்லம் விடுக்கும் வேண்டுகோள்



சைவ வித்தியாவிருத்திக்குழைத்து தாம் அநாதரான அமரர் சு. இராசரத்தினம் அவர்கள்

ஆதுலர்க்களித்தல்
அரன் பணியன்றோ!

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் நடுநாயகமான சைவப் பெருமகனார் திரு. சு. இராசரத்தினம் அவர்களால் இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன் தாபிக்கப்பட்டது சைவ அநாதர்சாலை. அதன் அருமபெருஞ்சேவைகளும் அதனால் விளைந்த பலதுறைப் பட்ட நன்மைகளும வாடறிந்தவை.

1962ம் ஆண்டு பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்ற பின் ஆசிரியர்களின் நன்கொடை தடைப்பட்ட போது 12-3-70 இல் தாம மறையும் வரை — இறுதி மூச்சுள்ளவரை — தாபகர் அவர்கள் தம் குழந்தையைப் பேணுவதுபோல் அநாதர் இல்லத்தைப் பேணி வந்தார்.

அதன்மேல் அரசாங்கத்தின் வழக்கமான உதவியோடு பரோபகாரசிலர்களின் உதவியும் பெற்று ஒருவாறு நடாத்தி வருகின்றோம.

இப்பொழுது அநாதர் சாலையை நடாத்தமுடியாத நிலை நேர்ந்திருப்பது யாவரும் அறிந்தது.

ஊண், உடை, கடதாசி, கொப்பி, புத்தகம் என்பன பெறுவதன் கஷ்டங்

வளர்ச்சி 2-ஆம் பக்கம்

## சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே;
திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

காலயுத்தி ௵ புரட்டாதி ௴ கஉ-உ வெள்ளி

## நாள் குறிக்கும் நடவடிக்கை

விரதங்கள் நோன்புகள் விசேட அநுட்டானங்கள் முதலியன என்ன நாள் எந்த நாழிகையில் ஆரம்பமாகின்றன போன்ற விபரங்களைச் சைவமக்கள் அறிந்து கொள்ள உதவுவன இந்நாட்டில் விளங்கும் பஞ்சாங்கங்களே. இந்திய தேச வெளியீடுகளும் பயனுறுகின்றன. இவற்றிலே குறிக்கப்படுவன ஒரே விதமாக இருப்பின் மன அமைதியாக விரதங்கள் வகையிலுள்ளனவற்றை மக்கள் அநுட்டிப்பது சுலபமாகும்; அவ்வாறின்றி வேற்றுமையான நாட்கள் குறிக்கப்படும்பொழுது எது சரி? என்ற முடிவை எடுப்பது பொதுமக்களுக்குப் பொருந்தாது! விசேட சாத்திரப் படிப்பும் பயிற்சியும் பெற்ற விற்பன்னர்களின் உதவியே வேண்டப்படும், ஆனல் இந்த நிபுணர்கள் மத்தியிலும் நிச்சயமான முடிபுகளைக் காண்பதரிது.

அநேகமாக ஒவ்வோராண்டிலும் இவ்வகையான விசாரணைக்கிடமாகவே நாட்கள் சில குறிப்பிடப்படுகின்றன. இவ்வாண்டிலே முக்கிய கவனத்துக்குரியது தேவி திருநாட்களாகிய நவராத்திரி வேளை. இந்த வைபவம் பொதுவாக ஒன்பது நாட்கள் கொண்டது; எனினும் சில வேளைகளில் எட்டு நாட்கள் வருவதுமுண்டு ஆனல் இம்முறை ஒரு சாரார் ஒன்பது நாட்கள் இன்னெரு பகுதியார் எட்டு நாட்கள் என்று கூறும் விபரீதம் எழுந்துவிட்டது. இந்த விவகாரத்தைப் பத்திரிகையாளர் தீர்த்துவிடமுடியாது. அரசியல், சமூகவியல் போன்றதல்ல இது. பிரத்தியேக சாத்திரக் கல்வியும் பாண்டித்தியமும் அவற்றில் அமைந்த அநுபவமும் உடையவர்களே கருத்து எடுத்துரைக்க வல்லவர்கள்.

ஒரு கிரியைக்குரிய நாள் நிமித்தத்தைக் குறிப்பதற்குரியன யாவை? பொதுவாக அமாவாசைத் திதியிலிருந்து நாட்கள் கணிக்கப்படுவதுண்டு. திதியும் நட்சத்திரமும் ஒருங்கு சேர வேண்டும் என்றும் சிலர் கருதுவர். வேறு விதமாக இரு திதிகள் ஒருநாளில் மேவ வேண்டும் என்றும் இரவு பகல் என்ற பொழுதுகளும் கணக்கில் எடுக்கப்பட வேண்டும் என்றும் சொல்வர் பலர்,

இந் நாட்டிலே வேதாகம வித்வ விற்பன்னர்கள் இருக்கின்றனர், இதுபோன்ற விபரீதங்களை ஆராய்ந்து எது முடிபு என்று கூற வேண்டியது அவர்களுக்குரிய கடமை.

ஆகவே வேத சிவாகம வித்வ சிரோமணிகள் உடனடியாக வருகிற நவராத்திரி காலம் இதுதான் என்று வரைவிட்டுச் செய்தி விடுத்தல் சமயத்தொண்டாகும் என்று நாம் கருதுகின்றேம்.

---

### திருநெல்வேலி சைவ அநாதர் இல்லம் . . .

( 1-ம் பக்க வளர்ச்சி )

களை விபரிக்க வேண்டியதில்லை.

சைவ அநாதர் இல்லத்தில் இப்பொழுது ஆண்களின் தொகை 110. பெண்களின் தொகை 130. மொத்தம் 240 பேர் வசிக்கிருர்கள்.

தனவந்தர்களின் கருணையை வேண்டி நிற்கின்றேம். உணவுப்பொருளோ உடையோ, பணமோ மற்றும் எவைகளேயோ நாடி நிற்கின்றேம்.

மேற்படி அநாதர் இல்லத்தால் விருத்தியடைந்தவர்களையும் கேட்டுக்கொள்கின்றேம்;

"யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி' என்பது திருமூலர் திருமந்திரம் இயன்றதை மனமுவந்து ஈவது விலைமதித்தற்குரியது,

பெற்றவைகளும் உபயோகித்த வகையும், பரிசோதனை செய்யப்பட்ட வரவுசெலவுவிபரம் வெளியிடப்படும்,

இச் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி சு. இ கனகநாயகம் அவர்கள், செயலாளர் திரு. சு சுப்பிரமணியம் அவர்கள். பொருளாளர் ச. வீரசிங்கம் அவர்கள்;

---

### நவராத்திரி விழா நடப்பதற்குரிய விதி யாது?

கன்னித் திங்களில் வரும் இந்த விரதகாலத்தைக் குறிப்பாக நிர்ணயிப்ப தெவ்வாறென நேயர்கள் சாத்திர வல்லுநர்களை அறிந்து கருத்தை வெளியிடுதல் நன்று.

வாக்கிய பஞ்சாங்கம் புரட்டாசி 16 (2-10-1978) திங்களைக் குறிக்கின்றது.

திருக்கணித பஞ்சாங்கம் புரட்டாசி 17 (3-10-1978 செவ்வாய்க்கிழமையைக் காட்டுகின்றது,

அமாவாசையும் பிரதமையும் கூடிய தினம் திங்கள். பிரதமையும் துதியையும் சேரும் நாள் செவ்வாய். இதில் எது விதிக்குரியது?

நேயர்களே! நீங்களே விடை பகருங்கள்;

---

### அரிச்சுவடி ஏடுகள் இலவசம்

நவராத்திரி தினங்களில் வித்தியாரம்பம் செய்யும் பாடசாலைகள், சபைகள், மன்றங்கள் தங்கள் வித்தியாரம்பத்திற்குரிய அரிச்சுவடி ஏடுகளைப் பின்வரும் இடங்களில் அண்மையானதில் பெற்றுக்கொள்ளலாமென்பதை யாழ்ப்பாணம் மில்க்வைற் தாபனத்தார் அறியத் தருகின்றனர்கள்,

வவுனியா:
சுத்தானந்த இந்து
இளைஞர் மன்றம்,
வவுனியா.

கொழும்பு:
79, மெசன்ஜர் வீதி,
கொழும்பு-12.

---

### கற்றேர் களிக்கும் பெற்றேர் தின விழா

இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலைப் பெற்றேர் தின விழா 24-9-78 ஞாயிறு மாலை 5 மணிக்கு ஆரம்பமானது.

திரு. வி. தர்மலிங்கம் பா. உ. தொடக்கி வைத்தனர். வடமாநிலக் கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் அவர்கள் இப் பாடசாலை வளர்ச்சி இந்நாட்டுக்கு பெரும் புகழுக்குரியதென்று பாராட்டினர்.

கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த திருவாளர்கள் ஏ மகாலிங்கம், ஆர் சோதிப்பெருமான் ஆகியோரும் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் அவர்களும் மதிப்புரை நிகழ்த்தினர்.

மேலதிக அரசாங்க அதிபர் திரு. என். பி. ஜெகநாதன் அவர்கள் ஆசியுரை வழங்கினர், பரிசில் [illegible] வழங்கப்பட்டன.

---

### சைவப் பெரியாரின் சால்பை இசைத்திடுவோம்!

— சொக்கன் —

(15-9-78 இதழ் தொடர்ச்சி)

#### 3. தாலப் பருவம்

மன்னிய செந்தமிழ் வடமொழி ஆங்கிலம்
மாண்புற வேகற்று
மாதவ ரீந்திடு தோத்திர சாத்திர
மாபரவை மூழ்கி
தென்றிசை யோர்களும் ஈழத் தவர்களும்
சென்னிமேற் கொண்டாட
தெய்விக நல்லுணர் வூட்டிடு நூல்பல
செய்திட வந்தவனே!
அன்புடன் மாணவர் கூட்டினை நன்னெறி
யதனிடைச் சேர்த்திடவும்
அன்னவர் வாழ்வுயர் வாகிட நோற்கவும்
அன்னைபோல் அமைபவனே!
தன்னிகர் அற்றவ! சிவபாத சுந்தர!
தாலோ தாலேலோ
தரணியி லிணையறு மறிஞனுய் ஓங்குவை
தாலோ தாலேலோ.

#### 4. சப்பாணிப் பருவம்

போதமுற வேதமுட னுகமபு ராணவகை
புந்தியுற நன்கு கற்றுப்
பூமிதனி லீசனரு ளோடுலவி ஞானநிலை
போற்றியிரு ளோட்ட வெண்ணக்
காதலொடு நாதனிரு பாதமக லாதநெறி
கண்டவரை நெஞ்சி ருத்திக்
காலையொடு மாலையிர வாகியமூ வேளையுமெய்
காணத் துடித்து நாளும்
தாதைபெய ரோதுமொரு மாதவனு மாகிடுவை
தண்ணளி மிகுத்து லவுவாய்
தங்காத வுடலொருவி மங்காத வுயிரிஞெளி
தாங்குவோர்க் கடியனுவாய்
சாதலை வெல்லவரு நாதனே! சிவபாத!
சப்பாணி கொட்டியருளே.
சாகாத நெறிகாட்ட வாகா யுதித்தவா!
சப்பாணி கொட்டியருளே.

(வளரும்)

---

உ

சைவ பரிபாலன சபை

### சைவ சமய பாடப் பரீட்சை

1977

#### பாடசாலைப் பரிசில் பெறுபவர்

முன் வளர்ச்சி — 3

30 மீசாலை காந்தீய சேவாசங்கம்
பாஸ்கரன் வேலுப்பிள்ளை 2

31 மட்டுவில் சாந்தநாயகி வித்தியாசாலை
பத்மநாதசர்மா சிவசாமிக்குருக்கள் 3
தமிழ்ச் செல்வம் பரமு 4
லலிதா இராசையா 5

32 வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாசாலை
கனிமதி கனகபாதசுந்தரம் 2
சியாமளா காசிப்பிள்ளை 3
கடம்பராணி குமாரசாமி 4
குகவரதன் முத்துலிங்கசாமி 5

33 யாழ்ரன் கனிட்ட வித்தியாலயம்
பத்மினி துரைராசா 4
சந்திரன் சுப்பிரமணியம் 5

34 நவாலி சென் பீற்றேஸ் றே. க. பாடசாலை
விஜயானந்தி சிதம்பரநாதன் 3
நகுலேஸ்வரி சிவகுரு 4
மணிவண்ணன் நடேசன் 5

36 சிவகுருநாத வித்தியாசாலை கரம்பன
தனஞ்சயன் தாமோதரம்பிள்ளை 2
கதிர்காமநாதன நடராசா 3
சிவேந்திரி குமரேசையா 4
சிவந்தினி கெங்காதரம் 5

(வளரும்)

---

### புண்ணியப் பாதைக்கு முதற்படி ?

"இறை — ஒளி"

பொருளற்றுப் போகப் புலானுண்ணப் புன்மை
மருளுற்று மன்னுயிர் மாய்க்க — வருவிக்கும்
போதைப் பொருள்உட் கொத்திரேல் புண்ணியப்
பாதைக் கெழுமுற் படி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இந்து"வுக்கு நூறுண்டு!

**செம்மையிற் சிறுற்ற சென்னைவளர் 'இந்து'வை எம்மனிதன் ஏத்தாதான்? ஏற்றமுடன்-அம்புவியில் செய்தி அமைக்கும் சிறந்தகலை வித்துவத்தை எய்தியதிந் நூற்ருண்டிலே.**

இவ்வாண்டு பாரதத்திலிருந்து வெளிவரும் "மதராஸ் இந்து" பத்திரிகை தனது நூற்றுண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. பத்திரிகை விருட்சமாக விளங்கும் "மதராஸ் இந்து"வை அதைவிடப் பழதாண்டு இளமையான "இந்துசாதன"மும் வாழ்த்துகிறது.

செய்திகளை நேரத்தோடு, ஆதாரபூர்வமான தெளிவுடன் பிறர் மனம் புண்படாவண்ணம் தருவதில் தனக்குத்தானே நிகராக விளங்கித் தமிழகத்திற்குப் பெருமைதரும் ஆங்கில இதழாக விளங்கும் இப்பத்திரிகையின் இன்றைய வாசகர் தொகை மூன்று இலட்சம் என்னும்போது யாரும் மூக்கில் விரலை வைக்க வேண்டுமல்லவா? இன்றைய பத்திரிகையுலக முன்மாதிரியாக விளங்கும் 'இந்து'வின் ஆரம்பகால முதலீடு ஒன்றேமுக்கால் ரூபாதான் என்பதும் அக்கால விற்பனைத் தொகை எண்பது மட்டுமே என்பதும் யாரைத்தான் ஆச்சரியத்தில் மூழ்கடிக்காது? "முயற்சி திருவினை ஆக்கும்" என்பது பொய்யா மொழியன்றோ! வாழ்த்தி அமையும் வேளையில் அதனது வளர்ச்சிப் படிகளை நோக்குவோமாக.

'இந்து'வின் வளர்ச்சிக் குறிப்புகள்

* ஆரம்பம்: 20-9-1878
  வெளியிட்டோர்: திருவல்லிக்கேணி இலக்கியச் சங்கம்
  வெளியீடு: வியாழக்கிழமை தோறும் வெளிவரும் வாரப் பதிப்பு. விலை: நாலணா ஆரம்ப விற்பனை: 80
* முதல் ஆசிரியர்: ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள். ஒரு தேசியவாதியும் சுதந்திரப் போராட்ட வீரருமான இவரும் இவரது நண்பர்களும் அன்று ஒன்றே முக்கால் ரூபா முதலீட்டுடன் ஆரம்பித்தனர்.
* 1-10-1883: வாரம் மூன்று முறை வெளிவர ஆரம்பம்.
* 1-04-1889: தினசரியாக மாலையில் வெளியாகியது. வாரப் பதிப்பும் வெளிவந்தது.
* ஏப்ரல் 1905: 'இந்து'வின் சட்ட ஆலோசகராய்ப் பணி புரிந்த பிரபல சட்ட அறிஞரான திரு. கஸ்தூரிரங்க ஐயங்கார் அவர்கள் அதிபராயினர். அன்றைய விற்பனை 800 பிரதிகள்.
* முதல் உலகப் போர்க் காலத்தில் 11,000 ஆக இருந்த விற்பனை 3000 ஆகக் குறைந்தது.
* 1921 இல் இந்துவுக்கு 'ரோட்டரி' அச்சியந்திரம் வந்தது. விற்பனை உயர்வு: 17,000
* 1923 இல் விருட்சமாய் வளர்த்த கஸ்தூரிரங்க ஐயங்கார் அவர்கள் காலமாயினர்.
* 1930 இல் பத்திரிகைச் செய்திகளுக்குச் சுட்டுவரிசையிட்டுப் (Index) பேணி வைக்கும் முறையை இந்துவே முதன் முதலாக ஆரம்பித்தது.
* 1938 இல் இந்தியாவிலேயே முதன் முறையாக 'இந்து'வுக்கு 'டெலிபிரின்டர் (Teleprinter) இயந்திரம் வந்தது.
* 1939 இல் வைரவிழாவினைக் கொண்டாடியது.
* 1940 இல் காலைத் தினசரியாக வெளிவந்தது.
* இரண்டாம் உலகப்போர் சமயத்தில் 37,000 பிரதிகளின் விற்பனை 27,000 ஆகக் குறைந்தது.
* 14-1-58 முதல், முதற்பக்கத்திலே செய்திகள் வெளிவர ஆரம்பித்தன. இதற்கு முன்னர், முற்பக்கத்தில் விளம்பரங்களே வெளிவந்தன.
* 1958 இல் தொழிலாளர் தகராறு காரணமாக 'இந்து' சில நாட்கள் வெளிவரவில்லை. ஆனால் அடுத்த ஆண்டில் விற்பனை ஓர் லட்சம் பிரதிகளைத் தாண்டியது.
* செப்டம்பர் 1963 இல் மதுரை, கோயம்புத்தூர் நகரங்களுக்கு "இந்து" தனது சொந்த விமானத்தில் பத்திரிகைகளை அனுப்ப ஆரம்பித்தது.
* பெப்ரவரி 1968 இல் அமெரிக்கச் செய்திப் பத்திரிகைகள் சங்கத்தின் "ஆண்டின் சிறந்த பத்திரிகை"ப் பரிசைப் பெற்றது.
* 1969 இல் Facsimile முறையில் கோயமுத்தூரில் 'இந்து' அச்சாகியது. இம்மாதிரி அச்சிடும் முறை ஆசியாவிலேயே இது முதல் தடவையாகும்.
* இன்றைய பத்திரிகையாளர் குழு: 174
* தொழிலாளர் தொகை: ஆயிரத்துக்கும் மேல்

## புத்தகச்செய்தி

சைவப்பெரியார்
சு. சிவபாதசுந்தரம்பிள்ளை
நூற்றுண்டு மலர்

நடராசப் பெருமானின் நடனத் தோற்றத்துடன் அமைந்த இம்மலர் பல அறிஞர்களின் கட்டுரைகளும் செய்யுள் மாலைகளும் பொருந்திய வெளியீடாகும்: சைவப் பெரியாரின் மாணுக்கரிற் சிலர் தங்கள் ஆசானின் நினைவை நனி நன்றியுடன் கட்டுரை வடிவாக்கியதொரு சிறப்பு.

வேறுவிதமாகச் சைவப்பெரியாருடன் அறிமுகமாகிய அறிஞர்கள் தங்கள் உள்ளக்கிடக்கையை உரைநடையில் மலரில் வெளியிட்டிருக்கின்றனர்.

இந்த வனப்புமிக்க மலர் தோன்றுவதற்கு முக்கியகாரணர் சைவப் பெரியார் நூற்றுண்டு விழாச் சபையினரும் விசேடமாக அதன் தலைவர் திரு ச. சிதம்பரப்பிள்ளை, செயலாளர்கள் திரு ந. சபாரத்தினம், திரு க. கிருஷ்ணபிள்ளை பொருளாளர் திரு அ. சின்னையா ஆகியோர் அடங்கிய மலர்க்குழுவினர்.

## கல்வி அதிபதி கண்களிற் கலாநிதி பண்டிதமணி

"புலவர் போற்றும் பெருமைக்குரியவர் பண்டிதமணி அவர்கள். தமிழை அழியவிடாமற் காத்த பெருமையில் பெரும் பங்கு பண்டிதமணி அவர்களுக்குரியது. தமிழ், சமயம் பற்றி நிதானமாகச் சரியாகக் கூறக்கூடிய ஒரே ஒருவர் பண்டிதமணி அவர்கள். நாவலர் என்றால் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களையே குறிக்கும். பண்டிதமணி என்றால் திருநெல்வேலி கலாசாலை வீதியில் இருக்கும் பேரறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களையே சிறப்பாகக் குறிக்கும். பண்டிதமணி அவர்கள் உயிர்களிடத்தில் செந்தண்மை பூண்டவர் ஆகையால் அவர் அந்தணப் பெரியார். தமிழின் ஆழத்தை அறிந்த பண்டிதமணி அவர்களுக்கு இலங்கைப் பல்கலைக் கழகம் கலாநிதிப் பட்டமளித்ததின் மூலம் தன்னையே உயர்த்திக் கொண்டது. இலங்கைப் பல்கலைக் கழகத்தினால் இலக்கியக் கலாநிதி என்ற கௌரவப் பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பட்ட முதல் தமிழறிஞரான பண்டிதமணி அவர்கள் நீடூழி வாழ்வார்களாக" என்று இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களைப் பாராட்டி எடுத்த பெருவிழாவிற் பேசிய வடமாநிலக் கல்வி அதிபதி தி. மாணிக்கவாசகர் அவர்கள் குறிப்பிட்டனர்.

பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் அவர்கள் தலைமை தாங்கிய இவ்விழாவில் பாடநூல் எழுத்தாளர் திரு. த. கனகரத்தினம் அவர்கள் ஒரு செய்தியில் "பண்டிதமணி ஐயா அவர்களுக்குப் பல்கலைக்கழகம் கலாநிதி என்னும் மேன்மையான கௌரவத்தை அளித்தமை கேட்டு அளப்பரும் மகிழ்ச்சி அடைந்தோம் தமிழும் சைவமும் தழைத்தோங்க ஆறுமுகநாவலர் பெருமானது அடிச்சுவட்டில் நின்று அரும் பணியாற்றி வரும் அன்னாரைக் கௌரவிப்பது தமிழுக்கும் சைவத்துக்கும் அளிக்கப்பட்ட தனிப்பெருங் கௌரவம்; சமய நிலையில் எல்லாவற்றையும் கடந்து இன்று அறிவுச்சுடராய் விளங்கும் பண்டிதமணி அவர்களின் கலாநிதிப் பட்டமே சிறப்பிடத்தை — அலங்காரத்தைப் பெறுகிறது. கலாநிதிப்பட்டம் பண்டிதமணியை அலங்கரிக்கிறதென்பதிலும், பண்டிதமணி ஐயா அவர்கள் கலாநிதிப் பட்டத்தை அலங்கரிக்கிறார்கள் என்று சொல்வதே மிகவும் பொருத்தமானது" என்று எடுத்துக்காட்டினர்.

# சைவப் பெரியாரிட்ட....

[1-ம் பக்கத்து வளர்ச்சி]

மகா பலசாலியான வாலி பாணத்தை இரு கைகளாலும் இறுகப் பிடித்து இழுத்துக்கொண்டே

'இராமனுமா இது செய்தான்'

என்ற எண்ணத்துடன்; பாணம் வந்த திசையை நோக்கினான். உடனே எதிரில் காட்சியளித்தான் இராமன்

வாலி இராமனைக் காணவில்லை,

'கண்ணுற்றான் வாலிநீலக் கருமுகில் கமலம்பூத்து
மண்ணுற்று வருவில் லேந்தி வருவதே போலும் மாலை'

இராமன் பால் சங்குசக்கர தாரியாக ஸ்ரீ நாராயண மூர்த்தியைக் கண்ணுற்றான், மரண நேரத்தில் தரிசித்தான்,

இந்த நேரத்தில்

'இராமனுமா இது செய்தான்' என்ற பழிச்சொல் என்ன ஆகும்!

இறைவனே இராமன் மூலம் ஸ்ரீமந் நாராயணனைக் காட்சியளிக்கின்றான் என்பதை உணர வல்லார் என் சொல்வார்.

'ஆட்பாலவர்க்கருளும் வண்ணம்' அளவில்லையன்றோ!

ஆழ்வார் வரிசையில் வைத்துப் பேசும் கம்பர் என்ன செய்கின்றார். பெரிய வம்பு செய்கின்றார்.

"என்னுற்றாய் என்செய் தாயென்று
ஏசுவான் இயம்ப லுற்றான்"

என்று வாலியைக் கொண்டு ஏசுவிக்கின்றார்.

மறைந்து நின்று பாணம் விடும்படி உன் குலமுதல்வரிய மநு சொன்னாரா? உன் மனைவியைப் பிரிந்தால் உனக்கு மூளைக் கோளாறோ? என்றெல்லாம் ஏசுவிக்கின்றார் கம்பர்.

வாலி இச் சந்தர்ப்பத்தில் ஏசுவான்தானோ?

வாருங்கள் இதனைக் கந்தபுராணம் பாடிய கச்சியப்பப் பெருமானிடம் விண்ணப்பிப்போம்.

சூரபத்மன் ஆதியர்கள், யுகம் யுகமாகத் தமக்குப் பகை என்றொரு பண்டம் இருப்பதை அறியாதவர்கள், (வளரும்)

# நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இல: 13533/சுடு

சமரபாகுதேவன் குறிச்சி
செல்வரத்தினம் கைம்பெண் சித்திரம்
மறுநாமம் ஞானபூங்கோதை — வாதி

எதிராக

வல்வெட்டித்துறை, வல்வெட்டி
கதிரவேலு பஞ்சரத்தினம் — பிரதிவாதி

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்தகோட்டால் எனக்கு மறுமுறையும் அனுப்பப்பட்ட (Re-issue) கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1978-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 8-ந் திகதி (8-11-78) புதன் கிழமை காலை 10 மணி தொடக்கம் குறித்த காணியில் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.
[கோட்டால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூபா 14,687/50 சதம்]

தீர்வைத் தொகை ரூபா 7500/-உம், மேலும் ரூபா 5000/-க்கு 24-2-1975 தொடக்கம் 25-6-1976 வரையும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வீத வட்டியும், 26-6-1976 தொடக்கம் விற்பனவுத் திகதி வரை கோட்டு வட்டியும், வழக்குச் செலவு ரூபா 406/95 சதமும் (இத்தொகையில் ரூபா 3850/- கட்டப்பட்டுவிட்டது.)

ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று உடுப்பிட்டியிறை ஒருக் "கொம்பனுலடி" நி. ப. 7 ஷெ நி. ப. 4, 8/4. எல்லை கிழக்கு சுப்பர் நவரத்தினத்துக்கும் மறுபேருக்குமுடையவாதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு ஒழுங்கையும் செல்லம் பெண் அம்மாவின் உரிமைக்காரருக்குடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், வடலிகள் அடங்கலிற் சொரியலாய் அரைவாசியும், பதிவு — பருத்தித்துறை A 273/90.

தி. வேலுப்பிள்ளை, J. P.
[ஏலதாரர், நீதிமன்ற விற்பனவு ஆணையாளர், விலை மதிப்பாளர்]

"கெக்சர் வாசம்"
வல்வெட்டித்துறை.
17-9-78

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THOUGHTS TO BE TREASURED

ஐம்பது எழுத்தே அனைத்து வேதங்களும்
ஐம்பது எழுத்தே அனைத்து ஆகமங்களும்
ஐம்பது எழுத்தேயும் ஆவது அறிந்தபின்
ஐம்பது எழுத்தும்போய் அஞ்சு எழுத்தாமே.

The fifty letters (along with the Om) they constitute the Vedas and the Agamas all. When this truth is realized, (it will be found that) the fifty letters merge in the five.

Hindu Organ

Friday, September, 29. 1978.

## THE MADRAS HINDU — TOKEN OF MAGNANIMITY

One hundred years of outstanding service in the cultural field of classic journalism should necessarily be marked as a rare and memorable occasion.

The Madras Hindu first appeared as a weekly in 1878 at a time when there was no National newspaper in India to voice the true sentiments of the people who were subject to foreign domination. Shri G. Subramania Iyer as the driving force of the Weekly, fighting against odds such as financial insufficiency, was able to forge ahead in developing the Journal to meet the needs of the people. And soon the Daily Hindu had become the fancy of almost every house-holder.

Keeping pace with the momentum that was being gathered by the people's movement — the Indian National Congress, the Hindu has been occupying pride of place in the great Sub-Continent.

Under the inspired guidance and lofty leadership of a long line of capable Editors who cherished the ideal of classic Journalism as interpreted by Mahatma Gandhi in his reputed Weeklies — the Young India and Harijan — the Hindu has become the symbol of solemn thoughts and elegant expression.

We take particular pleasure in joining the journals of the world to offer sincere wishes and heartiest congratulations to the mighty Madras Hindu on the great occasion of a remarkable event. The Hindu Organ, ten years junior to the Madras Hindu, itself has a long story of humble service in its own limited sphere Hence our happiness in wishing continuous prosperity for the esteemed Daily across the narrow waters of the Palk Strait.

## History of "The Kingdom of Jaffna"


Eelath Thamil Eluthuthalar Peravai (Ceylon Tamil Writers Association) commemorated the release of the History of "The Kingdom of Jaffna" by Dr. S. Pathmanathan on the 23rd of September, 1978 (Saturday).

Dr. Pon. Poologasingham Senior Lecturer, Colombo Campus presided.

The above book was released by Mr. M. Sivasithamparam, M. P. and was reviewed by Mr. James T. Rutnam and Dr. K. S. Nadarajah.

Mr. K. K. Eelaventhan, President, Ceylon Tamil Writers Association delivered the address of welcome.

# A Great Anniversary



October 2, 1978 — 109th Anniversary of Mahatma Gandhi

The One Hundred and Ninth Anniversary of Mahatma Gandhi's Birth Day falls on 2nd October 1978; soon after the Anniversary of another great leader, Venerable Anagarika Dharmapala, this event occurs. Both of them, Mahatma Gandhi and the Venerable Dharmapala, were known and friendly to each other. Both of them greatly influenced the course of events not only in Sri Lanka and India but to a considerable extent in other parts of the world

Mahatma Gandhi was a great friend of Sri Lanka even as Venerable Dharmapala was a great friend of India. His religious concepts were comprehensive and were based on the great ideals of all religions of the world, including Buddhism, whose principles according to the President of the Republic of Sri Lanka, Hon Mr. J. R. Jayawardene would guide the Dharmishta Society which is sought to be established in Sri Lanka. The Mahatma was one of the noblest Hindus of all times.

Mahatma's advice offered from time to time including his utterances on his visit in 1927 to Sri Lanka — his only visit to our country — are very helpful. The following extracts from his address delivered at the reception accorded to him by the Ceylon National Congress on 22nd November, 1927 under the leadership of Sir D. B. Jayatilleke and of which our President Mr. Jayewardene was a prominent office-bearer are illuminating:-

By S. SIVASUBRAMANIAM
Hony. Secretary, Council for National Unity and Welfare.

1. "Self Government depends entirely upon our internal strength, upon our ability to fight against the heaviest odds Indeed Self-Government which does not require that continuous striving to attain it and to sustain it is not worth the name. I have therefore endeavoured to show both in word and deed that political Self-Government—that is Self-Government for a large number of men and women, is no better than individual Self-Government and therefore that it is to be attained by precisely the same means that are required for individual Self-Government or self-rule and so as you knew also. I have tried in India to place this ideal before the public in season and out of season very often much to the disgust of those who are politically minded merely.

"I belong to that body of political thought which was dominated by Gokhale. I have called him my political Guru. The moving force of his life as I who came in close touch with him came to understand was his intense desire to 'Spiritualise Politics". — That was his one expression in the preamble to the prospectus of the Servants of India Society of which he was the Founder and First President. He (Mr Gokhale) makes the deliberate statement that he founded the Society in order to introduce Spirituality into politics.

2. "I am afraid as we are in India so you are out up into groups and communities. I read casually only today something in praise of Communalism. In India also we have this blight — we call it a blight; we don't praise it. Even those who believe in Communalism say frankly that it is a necessary evil to be got rid of at the earliest possible moment In India we have to deal with these hundred million people. But you have to deal with such a small mass of men and women and that it is a matter of pain and surprise for me to find a defence — an energetic defence of this communalism. I know that it is totally opposed to nationalism."

3 "We in India are striving; we are groping in the dark; we are trying to suppress provincialism; we are trying to suppress racialism; we are trying to suppress religionism. It is given to you to outstrip us and set us an example. It is easy for you, much easier for you than for us, but a condition indispensable for that is, that some of you at least will have to give your whole time to this and not only your whole time and you will have to suppress yourselves."

4. "Democracy is an impossible thing until the power is shared by all but let not democracy degenerate into mobocracy."

5. "Introduce a full measure of spirituality into your politics, then everything else will follow."

These are some extracts from an address delivered by the Mahatma in Sri Lanka before the attainment of Swaraj for India. In this context, it is well known that he was opposed to any kind of Division of India or Separation and it is all important to bear this fact in mind.

After the attainment of Swaraj, the Mahatma did not continue to advise Civil Disobedience but on the contrary suggested that the laws of a National Government should well be obeyed.

In September 1947 (India having regained its National Independence in 1947, the Mahatma wrote as follows:-

"In democracy, the individual will is governed and limited by the social will which is the State which is governed by and for democracy. If every individual takes the law into his hands, there is no State, it becomes an anarchy i. e. absence of social law or State. That way lies destruction of liberty. Therefore you should subdue your anger and let the State secure Justice"

(To be continued)

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, September 29, 1978.*

Editor-in-Chief:
R. N. Sivapirakasam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org